2008 மே 6] [திரு. கே.என். நேரு]

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20-உயர் கல்வித் துறை. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,192,64,33,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.61,34,67,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 20, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 232, திரு. கோவை தங்கம்.